## கொழும்பில் கருத்தரங்கு

கொழும்பில் தந்தை செல்வாவின் இல்லத்தில் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கு இன்றும் (30-6-76) மாலை 6 மணிக்கு திரு. சழவேந்தன் தலைமையில் நடைபெறுகிறது. திருகோணமலை மாநாடு சம்பந்தமாக இன்று கருத்துரைகள் வழங்கப்படும். விடுதலையான தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்களும் கலந்துகொள்ளுவார்கள்.


# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35 | வ.ஆ. 2007 ஆனி 17 | றஜபு 1 | (30-6-76) புதன் புத்தகம் 30 | இதழ் 20


● தமிழ்த் தலைவர்கள் மீதான வழக்கு

# ஜீ. ஜீ., செல்வா, ஆஜராவதை அரசு தரப்பு ஆட்சேபிக்கும்?

தமிழ்த் தலைவர்களுக்கு எதிரான வழக்கு மீண்டும் எதிர்வரும் யூலை 12ந் திகதி நீதிமன்றத்தில் எடுக்கப்படும்போது அரசாங்கத் தரப்பினர் சில சட்டப் பிரச்சினைகளைக் கிளப்பக் கூடுமென்று தெரியவருகிறது. மூதறிஞர் தந்தை செல்வா தலைமையில் சட்ட மேதை ஜீ. ஜீ. பொன்னம்பலமும் இன்னும் 66 சட்ட நிபுணர்களும் தமிழ்த் தலைவர்கள் சார்பில் ஆஜரானதைக் கண்டு அரசாங்கத் தரப்பினர் கிலியடைந்துள்ளதன் எதிரொலியாகவே இச்சட்டப் பிரச்சினைகளை கிளப்பப்படவிருப்பதாக ஊகிக்கப்படுகிறது.

1972ம் ஆண்டு மே 22ம் திகதி புதிய அரசியற் சட்டம் வந்தபோது, சட்டத்தரணிகள் அனைவரும் அரசியற் சட்டத்தின் மீது நீதிமன்றங்களில் விசுவாசப்பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு விடுக்கப்பட்டது தெரிந்ததே.

ஆனால் தந்தை செல்வா அவர்கள் சட்டத்தொழிலிருந்து ஒதுங்கியிருந்த காரணத்தினால், நீதிமன்றத்தில் இத்தகைய விசுவாசப்பிரமாணம் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் தேசிய அரசுப் பேரவையில் சம்பிரதாயப்படி விசுவாசப்பிரமாணம் எடுத்திருந்தார்.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களோ வெளிநாடுகளில் நீண்டகாலம் இருந்ததாலும், இலங்கை நீதிமன்றங்களில் அண்மைக் காலங்களில் சட்டத் தொழிலில் ஈடுபடாமல் ஒதுங்கியிருந்ததாலும் இவ்வாறு அரசியல் சட்டத்தின்மீது விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவில்லையென்று தெரியவருகிறது.

அரசாங்கத் தரப்பினர் தமது சட்டப் பிரச்சினையாக இதையே கிளப்பவிருக்கின்றனர் — அதாவது திரு. செல்வநாயகமும், திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் புதிய அரசியல் சட்டத்தின்கீழ் சட்டத்தரணிகளாக விசுவாசப்பிரமாணம் எடுக்காததால், இவர்களிருவரும் நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்கு தகுதியற்றவர்கள் என்று ஆட்சேபனை கிளப்பவிருக்கின்றனராம்.

அரசாங்கத் தரப்பினர் இத்தகைய ஆட்சேபனையை கிளப்பும் பட்சத்தில், அதன் மீது நடைபெறும் சட்ட வாதம் சுவையானதாக இருக்குமென்று தெரியவருகிறது. அரசதரப்பு ஆட்சேபனை கிளப்புமானால், அதை எதிர்த்து திரு. ஜீ. ஜீ. யும் மற்றவர்களும் எதிர் வாதம் புரியவிருக்கிறார்கள்.

# திருகோணமலையெங்கும் பேரெழுச்சி! முற்றவெளியில் அலங்காரப்பந்தல்!

## சிறப்பு மாநாடு; ஏற்பாடுகள் தயார்!

யூலை 9, 10ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிறப்பு மாநாட்டையொட்டி, திருகோணமலை இப்போதே எழுச்சிக் கோலம்பூண்டுவிட்டது! மாநாட்டை சிறப்புற வெற்றிகரமாக நடத்துவதற்கு மாநாட்டுக் குழுவினருக்கு திருகோணமலை வாழ் தமிழ் பேசும் மக்கள் பேரார்வத்துடன் தங்கள் ஒத்துழைப்பையும் உதவியையும் நல்கி வருகின்றனர்!

யூலை 9, 10ம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிறப்பு மாநாடு, போராட்ட அறிவிப்பு மாநாடாக அமையவிருப்பது தெரிந்ததே. வரலாற்றுச் சிறப்பு பெறப்போகும் இந்த மாநாட்டை சீரோடும் சிறப்போடும், எழுச்சியோடும் ஆடிப்போடும், வலிவோடும் பொலிவோடும் நடத்தி முடிப்பதில் திருகோணமலை வாழ் தமிழ் பேசும் மக்கள் அளவு கடந்த ஆர்வம் காட்டி வருகிறார்கள். மாநாட்டுக் குழுவினருக்கு. அரிசி, காய்கறி, நிதி போன்ற பல்வகை உதவிகளையும் மக்கள் வழங்கி தமது ஒத்துழைப்பை நல்கினர்;

மாநாட்டுக் குழுவினர் நிலாவெளி, குச்சவெளி, பன்

—2ம் பக்கம் பார்க்க

## ஓமந்தையில் சூரியர் விஜயம்

### மாணவர் பகிஷ்கரிப்பு!

வவுனியா மாவட்ட அரசியல் அதிகாரியும் தபால் அமைச்சருமான திரு. செல்லையாகுமாரசூரியரின் விஜயத்தை ஓமந்தை மாவித்தியாலய மாணவ மாணவிகள் நூற்றுக்கு நூறுவீதம் பகிஷ்கரித்தனர். ஓமந்தையில் குமாரசூரியரை வரவேற்குமுகமாக, மாணவ மாணவியரின் அணிவகுப்புக்கு ஒழுங்கு நடப்பதைக் கேள்வியுற்ற தன்மானமிக்க மாணவமணிகள், பாடசாலையையே முற்

—2-ம் பக்கம் பார்க்

# சிங்களவர்களுக்கு மட்டுமே நிலம்! தமிழருக்கு கைவிரிப்பு! —செல்லச்சாமி புகார்!

மலையகத்தில் சிங்களவருக்கு மட்டுமே நிலம் வழங்கப்படுவதாகவும் இலங்கைப்பிரஜாவுரிமை பெற்ற மலையகத் தமிழருக்கு நிலம் வழங்கப்படாமல் மறுக்கப்படுவதாகவும் இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி பிரதமருக்கு எழுதிய கடிதமொன்றில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அவர் தமது கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

1975ம் ஆண்டு அக்டோபர் 17ம் திகதி நிலச்சீர்திருத்த கமிஷன் பொறுப்பேற்ற கம்பெனித்தோட்டங்கள் 1976ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் அரசாங்க பயிர்ச்செய்கை கூட்டுத்தாபனத்தின் கீழும், 'ஜனவசம' என்ற நிர்வாகத்தின் கீழும் கொண்டுவரப்பட்டன. இந்தத் தோட்டங்களில் வேலை செய்வோருக்கு சகலவித வேலைப் பாதுகாப்பும் வழங்கப்படுமெனவும் எவரும் வேலையிழக்கமாட்டார்கள் என்றும் காணி விவசாய அமைச்சர் தேசிய அரசுப் பேரவையில் உறுதியளித்தார்.

"இப்போது இந்த உறுதிமொழி மீறப்பட்டிருக்கிறது. கிராம விஸ்தரிப்பு, நிலமில்லாதவர்களுக்கு நிலம் வழங்குவது என்ற போர்வையில் பிரஸ்தாப தோட்டங்களிலிருந்து நூறு நூற்றைம்பது ஏக்கர் நிலம் துண்டாடப்படுவதால், இவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வேலையை இழப்பதுடன் குடியிருக்கும் வீடுகளையும் நிலத்தையும் இழக்கவேண்டியுள்ளது.

இவ்வாறு துண்டாடப்படும் நிலம் சிங்களமக்களுக்கு மட்டுமே வழங்கப்படுவதாகவும் இலங்கைப் பிரஜாவுரிமைபெற்ற இந்தியவம்சாவளித் தமிழருக்கு நிலம் மறுக்கப்படுவதாகவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறு இலங்கைப் பிரஜைகளான இந்திய வம்சாவளியினருக்கு நிலம் மறுக்

—2-ம் பக்கம் பார்க்க

### சொந்தப் பிணையில் 11 இளைஞர்களும் விடுதலை!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாட்டின்போது கைதுசெய்யப்பட்டு கடந்த 45 நாட்களாக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த 11 தமிழ் இளைஞர்களும் 28.6.76ல் மல்லாகம் நீதவானால் சொந்தப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களுக்காக சட்டத்தரணி திரு. அ. அமிர்தலிங்கம், சு. நடராசா ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கத் தேர்தலில்

# தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றி!

## சூரியரின் கையாட்களுக்குப் பட்டைநாமம்!

கரைச்சி தெற்கு ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் கிளைத் தேர்தல் சென்ற 20-6-76ம் திகதி நடைபெற்றது. இதில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன், ஸ்ரீ. ல. சு. கட்சி என்ற போர்வையில் சில ஒத்துழைப்புப் தம்பிரான்களுக்கும் ஒவ்வொரு கிளையிலும் மோதல் ஏற்பட்டு, பதின்நான்கு கிளைகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அமோக வெற்றி பெற்றுள்ளனர்; இதனால் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏஜன்டுகள் சிலர் சூரியரின் முகத்தில் முழிக்கமுடியாமல் இருக்கின்றனர்.

தேர்தல் முடிவுகள் வெளியாவதற்கு முன்பே அனேக எடுபிடிகள் ஓடி ஒழித்துவிட்ட போதிலும், தலைமை ஏஜன்சியான ஒரு ஐயா மட்டும் வட்டக்கச்சி கிளைத் தேர்தல் முடிவு வெளியாகும்வரை நப்பாசையில் எதிர்பார்த்து நின்று, வாயால் சொல்லமுடியாத வசைமாரிகளை மக்களிடம் இருந்து வகையாக வாங்கிக் கொண்டார். வட்டக்கச்சி மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஒன்பதின்மரையும் அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டச் செய்தனர்.

இம்மதிப்புக்குரிய ஐயா செய்யும் கைங்கரியமோ சொல்லில் அடங்கா. சில பதவிகளைக் கையில் வைத்துக்கொண்டு அப்பாவி மக்களை மயக்கி சல்லாபிக்கின்றனர்; அத்துமீறிப் பிடித்த அரசாங்கக் காணிகளுக்கு அனுமதிப்பத்திரமும், உத்தியோகங்கள் பலவும், பதவி உயர்வுகளும் தருவதாகவும் ஏதோ வீட்டில் இருப்பதைக் கொடுப்பதுபோல் கதைத்துத்திரியும் இவருக்கு, மந்திரிமார்கள் எல்லாம் மிகமிகப் பரிச்சயம் என்று சொல்லி மக்களை பேய்க்காட்டுவதே இவரது தொழிலாகும். இதுவரை இவரால் சாதிக்கப்பட்டது என்னவெனில் சூரியரை வட்டக்கச்சிக்கு மூன்று தடவை பொதுப்பணத்தில் கூட்டிவந்ததே.

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் செய்த சாபக்கேடால் அச்சங்கத்திற்கு தலைவர்களாக வருவோர் செய்யும் தில்லுமுல்லுக்களை சொல்லும் தரமன்று. வடபகுதியில் 1970ம் ஆண்டுக்கு முன்னர் எவ்வளவுக்கெவ்வளவு கூட்டுறவு இயக்கம் முன்னோடியாக திகழ்ந்ததோ அவ்வளவுக்கு இன்று மந்திரிகளின் தலையீடுகளினால், சொல்லப்பட்ட,— கடைந்தெடுக்கப்பட்ட கசபோக்கிரிகளின் கையிலே திருவாகம் ஒப்படைக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் சின்னாபின்னமாக்கப்பட்டு வருகின்றது. இனி மேலாவது அரச பொதுப் பணத்தைச் சூறையாடுவோருக்கு துணைநிற்காமல் இருக்குமா...?

கிளைத்தேர்தல் முடிவுகள் வருமாறு:—

| இடம் | கூட்டணி | ஸ்ரீ. ல. சு. கட்சி |
|---|---|---|
| வட்டக்கச்சி | 9 | — |
| உருத்திரபுரம் | 9 | — |
| இராமநாதபுரம் | 9 | — |
| ஜெயந்தி நகர் | 9 | — |
| இராமநாதபுரம் ப. வா. திட்டம் | 9 | — |
| கணேசபுரம் | 9 | — |
| கனகபுரம் | 9 | — |
| கிளிநொச்சி மேற்கு | 8 | 1 |
| கிளிநொச்சி கிழக்கு | 9 | — |
| இரணமடு கிழக்கு | 9 | — |
| ஸ்கந்தபுரம் | 5 | 4 |
| கோணாவில் | 7 | 2 |
| ● திருநகர் | 3 | 6 |
| அம்பலப் பெருமாள் குளம் | 7 | — |

● திருநகர் கிளை இம்முறையே தேர்தலில் போட்டியிட்டமையால் வாக்காளர் பதியப்படவில்லை. இதன் மொத்த வாக்காளர் தொகை 126 ஆகும். திரும்ப தேர்தல் வைக்க ஏற்ற ஒழுங்குகள், செய்யப்படுகின்றது.

எழுதியவர்:— வட்டக்கசியான்

## திருகோணமலை..

—1-ம் பக்கத்தொடர்

குளம், தம்பலகாமம், சாம்பல் தீவு ஆகிய இடங்களுக்கு கடந்தவாரம்விஜயம்செய்த போது அங்குள்ள மக்கள் மாநாட்டுக்கு தங்கள் உதவிகளை உவந்தளித்தனர்.

### முற்றவெளிக்கு அனுமதி

மாநாட்டின்போது திருகோணமலை முற்றவெளியையும், திருகோணமலை இந்துக் கல்லூரியையும் பயன்படுத்துவதற்கு அரசாங்க அனுமதி கிடைத்துவிட்டது. முற்றவெளியில் மாநாட்டையொட்டி மாபெரும் அலங்காரப்பந்தல் ஒன்று போடப்படவிருக்கிறது. இந்தப் பந்தலில் கலை நிகழ்ச்சிகளும் இறுதிப் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

யூலை 9ம் திகதி நண்பகல் இந்துக் கல்லூரி மண்டபத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய நிர்வாகக் குழுக்கூட்டம் நடைபெறுவதுடன், மாநாட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்; அன்று மாலை முற்றவெளியில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

யூலை 10ம் திகதி காலை 10 மணிக்கு இந்துக்கல்லூரி மண்டபத்தில் தொழிலாளர் மாநாடு நடைபெறும். மாலை முற்றவெளியில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் போராட்ட அறிவிப்பு பிரகடனப்படுத்தப்படும்.

மாநாட்டையொட்டி திருகோணமலையெங்கும் உதய சூரியன் கொடிகளாலும் மகரதோரணங்களாலும் அலங்கரிக்கப்படவிருக்கின்றன. வீட்டுக்கு வீடு உதய சூரியன்கொடிகள் பறக்க விடப்படும். 1956ம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டைவிட, இந்த மாநாடு மேலும் சிறப்புப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தீண்டாமையொழிப்புக்கு விரிவான அடிப்படையில் கூட்டணியின் வேலைத்திட்டம்!

## விபரம் தருமாறு வேண்டுகோள்!

தீண்டாமை ஒழிப்புக்கென தமிழர் விடுதலைக்கூட்டணியினால் நியமிக்கப்பட்ட உபகுழுவினர் ஆலோசனைக் கூட்டம் 20-6-76 ஞாயிற்றுக்கிழமை மாலை கூட்டணி அலுவலகத்தில் நடந்தது. அதில் இதற்கென தொகுதிவாரியான ஒரு வேலைத் திட்டம் ஒன்றை தயாரித்து திருகோணமலை மாநாட்டுக்குச் சமர்ப்பிப்பதென முடிவு செய்யப்பட்டது. இதற்கென ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள குறைபாடுகள் பற்றி விபரம் அனுப்புமாறு இக்குழுகோரியுள்ளது. இது சம்பந்தமாக விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் வருமாறு:-

"தமிழருக்கு அதிகாரம் வந்தால்,சிறுபான்மைத் தமிழர்க்குள் பழையபடி சிரட்டை ஏந்த வேண்டி வரும்" என்று பிரச்சாரம் செய்து வருகின்றனர். சாதிபிரச்சினையை வைத்திருப்பதாலேயே தமது பட்டம் பதவிகளைக் காப்பாற்றிக்கொண்டிருக்கின்றவர்களின் கூற்றைப் பொய்ப்பிக்கும் வகையிலும் தீண்டாமை ஒழிப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ள அக்கறையை எடுத்துக்காட்டும் வகையிலும் மிகப் பரந்த அளவிலான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் வேலையில் இதற்கென நியமிக்கப்பட்ட உபகுழு ஈடுபட்டுள்ளது. ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலுள்ள இத்தகைய குறைபாடுகள் பற்றிய விபரங்களை இதற்கெனச் சேகரிப்பதில் குழு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இவற்றுக்குத் தீர்வுகாணவென, ஏற்கனவே வட்டுக்கோட்டை மாநில மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க இரண்டு மாதங்களுக்குத் தீவிரமாக நேரடி நடவடிக்கையில் கூட்டணி ஈடுபடவுள்ளது.

அத்துடன் இந்த உயர்வு தாழ்வை ஒழித்துக் காட்டுவதற்கென ஒரு நிரந்தர நீண்ட காலத் திட்டமாக ஒரு பொதுவேலைத் திட்டமொன்றும் தயாரித்து திருகோணமலை மாநாட்டில் நிறைவேற்றப்படும். எந்தவிதக் கட்சிக் கண்ணோட்டமுமின்றி, இப்பிரச்சினை தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினையாகக் கருத்திற்கொண்டு தீர்க்கப்படவேண்டும்.

எனவே, அந்தந்தத் தொகுதியிலுள்ள, இன்னமும் சிறுபான்மைத் தமிழர்களுக்கெனத் திறந்து விடப்படாமலிருக்கின்ற கோயில்கள், தேனீர் கடைகள் முதலிய பொது இடங்கள், பொதுக்கிணறுகள் பற்றிய விபரங்களையும், பொது வேலைத்திட்டத்திற்கென ஏதாவது ஆலோசனைகளையும் தெரிவித்து இதை ஒரு கலாச்சாரப் புரட்சியாக நிறைவேற்றிவைக்க உதவுமாறு உப-குழு வேண்டுகோள் விடுக்கிறது!"

## ஓமந்தையில் சூரி...

—1-ம் பக்கத் தொடர்

ருக நூறுவீதம் பகிஷ்கரித்து சூரியர் முகத்தில் கரிபூசினர். ஓமந்தை சேமமடு போன்ற பகுதிகளில் குமார சூரியருக்கு எதிர்ப்பு தெரிவித்து கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகள் பலவற்றை பொலிசார் அப்புறப்படுத்தினர்.

## சிங்களவர்களுக்கு...

—1-ம் பக்கத் தொடர்

சப்படுவது தாங்கள் ஏற்கெனவே பகிரங்கமாக அறிவித்தகொள்கைக்கு மாறானதாகும் என்பதைச் சுட்டிக் காட்டவிருப்புகிறேன்.

இவ்வாறு திரு. செல்லச்சாமி கூறியிருக்கிறார்;

## திருக்கேதீச்சரத்தில் குடமுழுக்குவிழா

தேவாரப் பாடல்பெற்ற பழம்பெரும்பதியான திருக்கேதீஸ்வர ஆலயத்தின் குடமுழுக்கு விழா எதிர்வரும் 4-7-76 ஞாயிற்றுக்கிழமை காலை சரியாக 9-06க்கு நடைபெறுகிறது. இக்குடமுழுக்கு விழாவுக்கான கிரியைகள் கடந்த 27-6-76 ஞாயிற்றுக்கிழமையே ஆரம்பமாகி இப்போது நடந்துவருகின்றன. ஆனி உத்தர தினமான 4-7-76 ஞாயிறு காலை 9-05க்கு விமானங்களுக்கும், 9-25க்கு திருக்கேதீச்சரப் பெருமானுக்கும் 9-45க்கு கௌரியம்பாளுக்கும், 10-25க்கு பரிவாரமூர்த்திகளுக்கும் குடமுழுக்கு நடைபெறும். இவற்றை நடத்திவைப்பதற்கு இந்தியாவிலிருந்து சிவாச்சாரியார்கள் பலர் வந்துள்ளனர்.

குடமுழுக்கு வைபவத்தை தரிசிப்பதற்கு திருக்கேதீச்சரத்தில் சுமார் ஒரு இலட்சம் [illegible] என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இதோ ஒரு 'ஜோக்'

"தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் குறித்து பிரதமருடன் அருளம்பலம் பேச்சுக்கள் நடத்துவார்!"
— தினகரன் (28-6-76)

● ஆசிரியருக்கு கடிதம்

## பொலிசாரின் மிருகத்தனம்!

அண்மையில் நடந்த புத்தூர் வங்கிக் கொள்ளை சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கைதான எமது அருமைச் சகோதரி புஷ்பராணியை பொலிசார் கண்ணியமற்ற முறையில் நடத்தியதாக அறிகின்றோம். சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய பொலிசார் பெண்களிடம் சட்டவிரோதமான நிலையில் நடந்தகொள்கின்றனர். இம்மாதிரி நிலை மீண்டும் தொடர்ந்துகொண்டிருக்குமானால், பொலிசார் இந்நாட்டு இளைஞர்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க நேரிடும் என கூறிக்கொள்கின்றேன். வடக்கில் நடக்கும் அசம்பாவிதங்களுக்கு இழக்கு மக்கள் அக்கறை காட்டமாட்டார்கள் என்று ஆட்சியாளரும், பொலிசாரும் தான்தோன்றித்தனத்துடன் நடக்கின்றனர்; ஆனால் தமிழனுக்கு இன்னல்நேரின் தமிழன் சகிக்க மாட்டான்.

பொன் சந்திரலிங்கம்
பாரதிபுரம்
கிளிவெட்டி

## கொன்றைப் பூக்கள் வெளியீட்டுவிழா

தாய் நாடு பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்டுள்ள மண்டூர் அசோகாவின் 'கொன்றைப்பூக்கள்' சிறுகதைத்தொகுதிவெளியீட்டு விழா 3-7-76 சனிக்கிழமை மாலை 6மணிக்கு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெறும். விழாவுக்கு திரு. அ. பொ. செல்லையா தலைமை வகிப்பார். விழாவில், வண. செல்வரத்னம் அடிகளார், எம். எம். பி. மொஹிதீன், ஜே. எஸ். சிவகுமாரன் க. நவசோதி, சில்லையூர் செல்வராசன், யோகா பாலச்சந்திரன் ஆகியோர் விமர்சன உரை நிகழ்த்துவர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சியும் தமிழர் கூட்டணியும் அன்று கூறிய உண்மையை முஸ்லிம்கள் இன்றே உணர்கிறார்கள்!

இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களின் பாரம் பரியப் பிரதேச கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் பறிபோய்க்கொண்டிருக்கின்றன; இஸ்லாமியத் தமிழர்கள் வாழையடி வாழையாக விவசாயம்செய்து வந்த கிழக்குமாகாணத்தின் செழிப்பு மிக்க பிரதேசங்கள் பறிபோகின்றன — இதைத் தடுத்து நிறுத்த அனைவரும் ஒன்றுபடவேண்டும்''!

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சி 1949ம் ஆண்டிலிருந்தே எச்சரிக்கத் தொடங்கியது. ஆனால் தமிழரசுக் கட்சியின் இந்த எச்சரிக்கை— பதவிமோகத்தில் சிக்கி சுயநலமிகளாக வாழ்ந்துகொண்டிருந்த முஸ்லிம் தலைவர்களின் காதுகளில் அன்று விழவில்லை. தமிழரசுக்கட்சியின் எச்சரிக்கையை அன்று அவர்கள் ஏளனம் செய்தனர்; சிங்களப்பெரும்பான்மையினருடன் ஒத்துழைத்து தமிழ்பேசும் சிறுபான்மையினருக்கு தாங்களே குழிதோண்டினர்.

முஸ்லிம் தலைவர்களின் இந்த சுயநலப்போக்கினால், முஸ்லிம் மக்களின் பாரம்பரிய பூமியாகவிருந்த அம்பாறை மாவட்டம், சிங்களக் குடியேற்றத்தின் காரணமாக சிங்களவர் கைக்கு மாறியது. அம்பாறை என்ற சிங்களத்தொகுதி யொன்று உருவாகியது. தங்கள் பாரம்பரிய மண்ணை பறிகொடுத்து கிழக்கு மாகாண முஸ்லிம்கள் இன்று கைபிசைந்து நிற்கிறார்கள்.

இதே போல திருகோணமலை மாவட்டத்திலும் தமிழ்பேசும் முஸ்லிம்களுடைய நிலங்கள் பல்லாயிர ஏக்கர் சிங்களவருக்கு தாரைவார்த்துக்கொடுக்கப்பட்டபோது, முஸ்லிம்களின் தலைவர்கள் என்று சொல்லப்பட்டவர்களும் அதற்கு ஒத்துழைப்பு நல்கி, தங்கள் தலையில் தாங்களே மண்ணைவாரிக்கொட்டிக்கொண்டார்கள். அதனால் இன்று திருகோணமலை மாவட்டத்தில்'சேருவாவில்' எனும் புதிய சிங்களத் தொகுதிதோன்றிவிட்டது.

இது தவிர — அண்மையில் புத்தளத்திலும் வேறு இடங்களிலும் ஏற்பட்ட சம்பவங்

## தமிழ்ஈழ விடுதலைக்கு குரல் கொடுக்கும் காலமும் அதிகதூரத்தில் இல்லை!

களும் முஸ்லிம் தலைவர்களை இன்றுதான் சிந்திக்க வைத்திருக்கின்றன. தமிழரசுக் கட்சியும், தமிழர் கூட்டணியும் ஐந்து ஆண்டுகளுக்கு முன்நின்ற இடத்துக்கு அவர்கள் இப்போதுதான் வந்திருக்கிறார்கள்.

ஆம். வீரகேசரி 27-6-76 செய்தியின்படி கிழக்கு மாகாண முஸ்லிம்கள், தமிழுக்கு சம அந்தஸ்து, தமிழ் பிரதேசப்பாதுகாப்பு ஆகிய இலட்சியங்களைக் கொண்டு தனி அரசியற் கட்சியொன்றை ஆரம்பிக்கப்போகிறார்களாம்.

- தமிழ்மொழிக்கு சிங்கள மொழியுடன் சம அந்தஸ்து பெறப்பாடுபடுதல்.
- இலங்கையின் சகல மதங்களுக்கும் சம அந்தஸ்தை ஏற்படுத்துவதும் அந்நிலையைப் பாதுகாப்பதும்.
- அடிப்படை உரிமைகளை அரசியலமைப்பில் உறுதிசெய்வதோடு அவற்றுக்கெதிரான தலையீடுகளிலிருந்து நீதிமன்றங்கள் மூலம் பரிகாரம்பெறவழிசெய்தல்.
- இந்நாட்டில் சிறுபான்மையாக வாழும் தமிழ்பேசும் மக்களுக்கு அவர்கள் நிரந்தரமாகவும் பயமின்றியும் வாழ்வதற்கு அனுசரணையாக அரசு நிலங்களை நியாயமாகப் பங்கிடச்செய்வதற்காக உழைத்தல்.
- தமிழ்பேசும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பிறமாவட்ட மக்களைக் கொண்டு குடியேற்றங்கள் நடைபெறுமலிருக்க ஒழுங்குகளை மேற்கொண்டு, சட்டவிரோதமாகச் செய்யப்பட்ட குடியேற்றங்களிலிருந்து தமிழ்பேசும் மக்களுக்குரிய நிலங்களை சட்டஉதவியுடன் மீட்டல்.

இதுபோன்றஇன்னோரன்ன கொள்கையுடன் முஸ்லிம்களுக்கென தனியொரு அரசியற் கட்சி ஆரம்பிக்கப்படவிருக்கிறதாம். இதன் பின்னணியில் நிற்போர் யார் என்பது தெரியவில்லை.

ஆம், தமிழரசுக்கட்சியும் தமிழர் கூட்டணியும் இதுவரை காலமும் எங்கு நின்றதோ அந்த இடத்துக்கு இவர்கள் இப்போது தான் வந்து சேர்ந்திருக்கிறார்கள். தமிழர் விடுதலைக்கூட்டணி இன்று நிற்கின்ற இடத்துக்கு இவர்களும் மிகவிரைவில் வந்து சேருவார்கள் என்பது திண்ணம்!

தமிழ்பேசும் மக்களுக்கென நிலமிருந்தால் மட்டுமே—பிரதேசம் இருந்தால் மட்டுமே — தமிழர்களும் முஸ்லிம்களும் தனித்துவத்துடன் அழியாது வாழமுடியும் என்பதை இப்போது தான் இவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்,

தமிழர் விடுதலைக்கூட்டணியோ தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு தாயகம் இருந்தால் மட்டும் போதாது; அந்தத் தாயகத்தை தமிழ்பேசும் மக்களே ஆளவேண்டும்; அப்போதுதான் தமிழினம் வாழமுடியும் என்று கூறுகிறது. இந்த உண்மையை இவர்கள் உணரும் காலம் அதிக தூரத்திலில்லை:

நாம், முஸ்லிம் இளைஞர்களை அழைக்கின்றோம். தமிழர் விடுதலைக்கூட்டணியின் இலட்சியம் ஒன்றே தமிழ் பிரதேசத்துக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் சுதந்திரம் பெற்றுத்தரும் —தமிழர்களும் முஸ்லிம்களும் தங்கள் பிரதேசத்தை தாங்களே ஆண்டால் மட்டுமே சுயமரியாதையுடன் அழிவிலிருந்து மீட்சி பெற்று இங்கு வாழ முடியும். எனவே தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் இணையுங்கள்! இணைந்து தமிழ் ஈழத்தின் விடுதலையை வென்றெடுக்க தமிழ் மக்களோடு தோளோடு தோள் நின்று போராடவாருங்கள்! தங்கத் தமிழ் ஈழத்தில் நம்மை நாமே ஆளும் மக்களாக முஸ்லிம்களும் தமிழர்களும் சகோதரர்களாக வாழுவோம்!

வாழ்க தமிழர் இஸ்லாமியர் ஒற்றுமை!

# 'சர்க்கஸ்' ஒற்றுமை நமக்குத் தேவையில்லை! வேற்றுமையிலேயே ஒற்றுமை பிறக்கும்!

## முத்தமிழ் விழாவில் வித்தியானந்தன் முழக்கம்!

'முன்பு என்றும் காணப்படாத அளவிற்கு இன எழுச்சியும் மொழிப்பற்றும் இப்பொழுது அதிகமாகக் காணப்படுகின்றது. சுரண்டல்கள் மலிந்துவிட்ட காரணத்தால், சுரண்டல்கள் ஒழிக்கப்படவேண்டும் என்ற எண்ணம் எழும்புகின்ற போதே இவ்வெழுச்சி ஏற்படுகின்றது.

''அரசாங்க உத்தியோகத்தர் பலர் தமது முயற்சியையிட்டும் கவலைகொள்ளாது இன எழுச்சிக்காகவும், விடுதலைக்காகவும் பாடுபடுகின்றார்கள்; இவர்களது இந்த தியாக உணர்ச்சி பாராட்டப்பட வேண்டியதாயிருக்கிறது;

உலகம் முழுவதும் கலைச் செல்வத்தை படைத்து அளித்தவன் தமிழன். தமிழ் உலகெலாம் வாழ்கின்றது, முன்பு தனக்கென ஒரு நாடும், அதற்கென மன்னரும் இருந்தார்கள். அவர்கள் தயவில் மக்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் மூலம் தமிழ்க்கலை வளர்ந்தது.

''ஆனால், இன்று தமிழன் வாழும் எந்தத் தேசத்திலும் அவனுக்கு என்று அரசில்லை. எங்கும் பணிந்துதான் வாழ்கின்றான். ஈழத்தில் வாழும் தமிழர்களின் கலையை வளர்ப்பதற்கென்று ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது ஆண்டுக்கு ஒருமுறை போட்டி நடத்துகின்றது. ஆனால் இதுவரையில் ஒரு தமிழரையேனும் தெரிவு செய்து பிறநாட்டிற்கு அனுப்பி பயிற்சி கொடுக்கப்படவில்லை. பரதக் கலையிலே கூட தமிழ்நாட்டைவிட மிகச்சிறந்த கலைஞர்கள் இங்கு இருக்கிறார்கள். இவர்களெல்லாம் அரசின் ஆதரவு இன்றி தமது சுயமுயற்சியினாலேயே முன்னேறி வருகின்றார்கள்.

''எனவே தமிழர் கலைகள் வளர்ச்சியடைய வேண்டுமானுல் அவர்களுக்கு என்று ஒரு அரசு வேண்டும். ஆட்சியிலே இருப்பவர்களோ அவர்களுக்குச் சார்பாக இருப்பவர்களுக்குத்தான் ஆதரவு தருவார்கள். இதனால் உண்மையான கலை வளர்ச்சிக்கு இடமின்றிப் போகின்றது.

''ஒரு இனம் சுதந்திரம் பெறவேண்டும், விடுதலை பெறவேண்டும், ஆள வேண்டும் எனக்கேட்டு இன எழுச்சி கொள்ளும் வேளையிலேதான் ஒற்றுமை பற்றிப் பேசுதற்கும் புறப்படுவார்கள்.

''சர்க்கஸ் காட்சியை நாம் பார்க்கின்றோம். சிங்கத்தின் முதுகில் சிறு நரி ஏறிச்செல்லுகின்றது. சிங்கத்தின் முதுகில் குரங்கு ஏறிச்செல்லுகின்றது, புலியின் முதுகில் ஆடு நிற்கின்றது. இதனால் அவற்றிற்கிடையே உண்மையான ஒற்றுமை நிலவுகின்றது என்பது பொருளல்ல. அவையெல்லாம் பழக்கத்தின் விளைவாக ஏற்பட்டவை.

உண்மையான ஒற்றுமை மலரவேண்டில் வேற்றுமைக்கு இடம் கொடுக்க வேண்டும். பிரிவினிலே தான் உண்மையான ஒற்றுமை காணமுடியும். அண்ணன் தம்பி இருவரும் பெற்றோரின்கீழ் ஒற்றுமையாக வாழ்கின்றனர். பெற்றோரின் காலத்தின்பின் அண்ணன் அதிகாரம் காட்டுகின்றான் அங்கே ஒற்றுமை சிதைகின்றது.

அண்ணன் தம்பி திருமணம் [illegible] பிரிந்து வாழுகின்றார்கள் அங்கே ஒற்றுமை நிலவுகின்றது.

''கண்ணிரண்டும் விற்று
சித்திரம் வாங்கினால்
கைகொட்டி சிரியாரோ''?

என்று பாரதிபாடுகின்றான். கண்கள் இருந்தால் தான் அவன் வாங்கிய சித்திரத்தை அனுபவிக்க முடியும். அதற்காக மக்களை நாம் விலையாகக் கொடுக்க முடியுமா?

கண்கள் எனக் கூறும் போது ஒன்று மொழி, மற்றது நாடு. இந்த இரு கண்களையும் விலைபேசி சலுகைகளைப் பெற்றால் — அரசியல் அதிகாரி பதவிக்காகவும், கூட்டுறவுச் சங்கப் பதவிக்காகவும் நாடு,மொழி ஆகிய கண்களை விற்பவர்களைப் பார்த்து ஏளனம் செய்து சிரிப்பார்கள்.

குருடரின் முன்னால் அடுத்தவர் சிரிப்பது தெரியாது என்பதற்காகவே, அந்தக் குருடர்களின் காதிலே ஒலிக்கவேண்டும் என்பதற்காகவே கைகொட்டிச் சிரிப்பாரடி என்ற வார்த்தையை பாரதியார் அங்கு உபயோகித்துள்ளார்.

எனவே இத்தேசத்தில் தமிழன் ஓர் இனமாக, தமிழ்ப்பேசும் இனமாக வாழவேண்டில் பதவிகளுக்காக, சலுகைகளுக்காக மொழியை, நாட்டை விற்கக்கூடாது.

தமிழன் தன்னைத்தான் ஆளவேண்டும் அதுவே இன்றைய தமிழன் முயற்சி.

— இவ்வாறு சென்ற 26-6-76 சனிக்கிழமை மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற புகைபிரதத் திணைக்கள முத்தமிழ் விழாவில் பேசும்போது பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறிப்பிட்டார்.

## மறைவு!

இளைப்பாறிய அரசாங்க கணக்காளரும், கே. ஜி. இண்டஸ்றீஸ் கணக்காளரும் கனகம்மாவின் கணவரும் தமிழர் கூட்டணி (மாவிட்டபுரம்) முக்கிய தொண்டருமாகிய மாவிட்டபுரம் சி கந்தப்பிள்ளை 15-6-76ல் காலமானார். அன்னாரின் குடும்பத்தினர்க்கு அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம். —ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

சுதந்திரன்
SUTANTIRAN

# திருத்தங்கள் அனைத்தும் நிராகரிப்பு!
# எதேச்சாதிகாரமுறையில் நிறைவேறியது
# 20 அம்ச அரசியல் நாடகம்

**தமிழ்பேசும் மக்களின் உரிமை இயக்கமென தமக்குத் தாமே பெயரிட்டுக்கொண்டிருக்கும் அரசாங்க எடுபிடிகளின் 20 அம்சம் பற்றி ஆராயும் கூட்டமொன்று 26-6-76 சனிக்கிழமை கொழும்பிலுள்ள இஸ்லாமிய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். பத்திரிகை நிருபர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. இருந்தபோதிலும் அங்கு நடந்த சங்கதிகளை சுதந்திரன் ஒற்றர் எப்படியோ அறிந்து இதோ தருகிறார் — படியுங்கள்!**

சென்ற சனிக்கிழமை கொழும்பிலுள்ள இஸ்லாமிய சலாச்சார மண்டபத்தில் காலை 10மணி வரையில் ஒரு கூட்டம் கூடியது. இக்கூட்டத்தைக் கூட்டியவர்கள் தமக்குத்தாமே தமிழ் பேசும் மக்களின் உரிமை இயக்கமென" பெயரிட்டுள்ளனர். உண்மையில் இவ்வியக்கத்தை தமிழ்பேசும் மக்களின் உரிமை இயக்கம் என்பதற்குப் பதிலாக தமிழ் பேசும் மக்களின் சலுகை இயக்கம் அல்லது ஆளும் கட்சியினரை அடிவருடும் இயக்கமென வர்ணிப்பது யாவும் பொருத்தமுடையது.

இக்கூட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை. தம்மை தாமே தலைவர் என கூறிக்கொள்வோர் தான் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். முஸ்லிம்களைப் பொறுத்தவரையிலும் சரி, மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும் சரி, அவர்கள் சார்பில் தகைமை பெற்ற பேராளர்கள் எவரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அவர்கள் பிரச்சினை ஆராயப்படவும் இல்லை, அதுமட்டுமல்ல 20அம்சத் திட்டத்தில் கையொப்பமிட்ட இ. ஆர். எஸ்; ஆர். குமாரசுவாமி உட்பட பலர் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

தமிழ் மக்களிடையே தமக்கு இருந்து வந்த சிறு செல்வாக்குக் கூட சரிந்து போவதை தாங்கமுடியாத வேதனையில் தமது இயக்கத்திற்குப் புத்துயிர் அளிக்கும் முயற்சியாகவே கம்யூனிஸ்ட் உட்பட அரசாங்க ஆதரவாளர்களால் இக் கூட்டம் கூட்டப்பட்டது.

கூட்டத்திற்கு திரு. வி. கணபதிப்பிள்ளை தலைமை தாங்கினார். அவரின் உரையை தலைமையுரை என்றோ முடிவுரை என்றோ கூறமுடியாத நிலையில், தன் கொள்கை தனக்கே தெரியாத நிலையில் குழப்பம் நிறைந்த உரையாக விளங்கியது; அவர் பேச்சில் தமிழரின் உரிமையைப் பற்றி கூறப்பட்ட கருத்துகளிலும் பார்க்க நாட்டின் ஒற்றுமை, இடைவரின் நட்பினைப் பெறல்போன்ற கருத்துக்கள்தான் நிலைதூக்கி நின்றன.

## கம்யூனிஸ்ட் பொம்மலாட்டம்

வரவேற்புரை நிகழ்த்திய கலாநிதி கோபாலப்பிள்ளை மகாதேவா, தனது உரையில் தமிழ் மக்களுக்கு உரிமையைப் பெற்றுத்தரதான் கங்கணம் கட்டியுள்ளதாக ஏதோ பிதற்றினார், அவரின் பேச்சைக்கேட்பார் அறப் படித்தும் கூழ்ப் பானைக்குள் வீழ்ந்த கதையாகவே இவரின் பேச்சு விளங்கியதென்றும், இவர் கலாநிதியா அல்லது கல்லாத நிதியோ என்றும் தமக்குள் நகைசுவையோடுபேசிக் கொண்டனர். மற்றும் சிலர் அவர் நடாத்தும் தொழிலுக்கு அரசிடம் ஆதரவுபெற எடுக்கும்முயற்சியா? அல்லேல் கொழும்பு மேற்குத்தொகுதியில்போட்டியிடும் எண்ணத்தின் விளைவா இவரின் பேச்சின் நோக்கம் என்று தமக்குள் கதைத்துக்கொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்டோரில் திரு. வ. பொ., பொன் குமாரசாமி கலாநிதி சிவத்தம்பி, இரா. சிவலிங்கம், இராமநாதன் எம். சி. சுப்பிரமணியம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் இப்பெயர் பட்டியல் இக்கூட்டம், கொம்யூ ஸ்ட் கட்சியின் பொம்மலாட்டம் என்பதனையே எடுத்துக் காட்டுகின்றது.

## புலவர் மணியின் பரிதாபம்

கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்திய புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை மிக பரிதாபத்திற்குரியவராக காட்சியளித்தார். அரசியலில் அரிச்சுவடி தெரியாதவர்—தமிழ் இலக்கியத்தில் மூழ்கித்திளைத்து தனக்குள் அடிக்கடி ஏதோ ஒரு பொருளை உட்[illegible] தனியுலகில் வாழும் அவர். தான் அரசியலைத்துறந்து பல காலம் என்றும் "அறி

ஞர்கள்" தம்மை அழைத்ததினால் தாம் அங்கு வருகை தந்ததாகவும், ஸ்ரீமாவோ அம்மையாரின் ஆற்றலிலும் நல்லெண்ணத்திலும் தமக்கு நல்ல நம்பிக்கையிருப்பதாகவும், அம்மையார் இப்பிரச்சினையை எப்படியும் தீர்த்து வைப்பார் என்றும் கூறினார்.

## சேதுகாவலர் கோரிக்கை

திரு. சேதுகாவலர் எம்.ஏ. (முன்னாள் றோயல் கல்லூரி ஆசிரியர்) இருபது அம்சக் கோரிக்கைக்கு சில அடிப்படைத் திருத்தங்களை கொண்டுவந்து உரையாற்றினார். அவற்றுள் சில தமிழர்களுக்குப் பிரதேச பாதுகாப்பு இல்லாத நிலையில் கொண்டு வரப்படும் எந்த தீர்மானங்களையும் தமிழ் மக்கள் ஏற்கப்போவதில்லையென்றும் மிக உணர்ச்சியுடன் கூறினார். அத்துடன் தாம் கொண்டுவந்துள்ள திருத்தங்களை உள்ளடக்கிய தீர்மானம் நாட்டின் முதல்வருக்கு அனுப்பப்பட்டு நிறைவேற்றப்படாத நிலையில் இனிமேல் முதல் அமைச்சருடன் எத்தகைய பேச்சு வார்த்தையும் நடாத்தக் கூடாது என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து தமிழர்களின் விடுதலைக்காகப் போராட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இவரின் திருத்தப் பிரேரணைகள் முற்றாக நிராகரிக்கப்பட்டன,

இக்கூட்டத்தில் திரு; கே. சி. நித்தியானந்தா, திரு. கே. சி. தங்கராசா அவர்களும் மௌனம் சாதிப்பதில் உறுதி பூண்டவர்களாகக் காட்சியளித்தனர்.

## மசூர் கண்டனம்

இக்கூட்டத்தில் அழையா விருந்தாளியாகவோ, அல்லது அழைக்கப்பட்ட விருந்தாளியாகவோ வந்த ஜனப் மசூர் மவுலானா அவர்கள் மட்டக்களப்பு தமிழ் மக்களுடைய நிலையை குறிப்பாக முஸ்லிம் மக்களுடைய நிலையை—ஒரு கரையில் சிங்களக்குடியேற்றத்தினாலும் மறுபுறம் கடலினாலும் நெருக்கப்பட்டு தத்தளிக்கும் தம் நிலையைப்பற்றி புரிந்தவர்களாக, இக்கூட்டத்தின் அழைப்பாளர்கள் இருப்பதாகத் தெரியவில்லை எனவன்மையாக கண்டனம் தெரிவித்தார்.

## றசீத் உளறல்

சர்வமத காங்கிரசின் உபதலைவரென தம்மை வர்ணித்த எஸ். எம். ஏ. றசீத் என்பவர் எல்லோரையும் பேய்க்காட்டும் முறையில் தமது குடும்பத்தைப் பொறுத்தவரையில் தாம் மும்மொழியிலும் வல்லமை பெற்றிருப்பதாகவும், தம் குடும்பத்தைப் பொறுத்தவரையில் மொழிப்பிரச்சினை இல்லையென்றும் கூறிய அவர் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏதோ மொழிப் பிரச்சினை உண்டு என்பதை தாம் ஏற்றுக் கொள்ளுவதாக உளறிவைத்தார்.

உலக அரசியலை தான் தான் கரைத்துக் குடித்திருப்பதாக கற்பனை உலகில் சஞ்சரிக்கும் பிறேம்ஜி என்ற பேர்வழி அங்கு கூடியிருந்த சிலருடன் குசுகுசு கூட்டங்கள் நடத்தக் காணப்பட்டார். அனைத்தையும் [illegible] அவர் நோக்குவதன் விளைவோ இதுவென நாம் ஊகிக்கிறோம்.

## விக்னராசா முழக்கம்

மேக்கன்டைல்கிரடிட்டில் Mercantile Credit) முகாமைப் பணிப்பாளராக (Managing Director) பணிபுரிபவர் திரு. விக்னராசா அவர்கள் (இலங்கை வங்கியில் முன்னாள் முகாமையர் திரு.சி.லோகநாதனின்பெருமகன்) தமிழ் மக்களால தெரிந்தெடுக்கப்பட்ட தகுதி பெற்ற தலைவர்களை முற்றாகப் புறக்கணித்து எதுவித பிரதிநிதித்துவத் தகுதியுமற்ற ஒரு சிலர் தமிழரின் உரிமையைப் பற்றிப்பேசுவதற்கோ, நாட்டின் முதல்வருடன் பேச்சு வார்த்தை நடாத்துவதற்கோ என்ன தகுதியுண்டு—என்ன உரிமை உண்டு என்று காரசாரமாக கணீர் என்றகுரலில் தனக்கே இயல்பாக அமைந்த ஆங்கிலத்தில் சாடினார்,

தொடர்ந்து பேசுகையில் இக்கூட்டத்தினை அழைத்தோரின் நோக்கு பிறரையும் ஏமாற்றி, எம்மையும் ஏமாற்றும் வீண் முயற்சி என்று கூறினார். தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை உணராத நிலையில் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல்வது எந்தவித பயனையும் தரப்போவதில்லையென்று கூறினார்.

இவரின் பேச்சு அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

திருமதி கந்தையா என்ற ஒரு பெண்மணி. அவர் யாரின் பிரதிநிதியோ நாம் அறியோம். ஆனால் நிச்சயம் ஆளும் கட்சியின் அடிவருடி என்பதை எடுத்துக்காட்டும் முறையில், தமிழ் இளைஞர்கள், தமிழ் தலைவர்களால் பிழையான வழியில் நடாத்திச் செல்லப்படுவதாக முதலைக்கண்ணீர் வடித்தகாட்சி கண்ருவிக் காட்சியாக விளங்கியது.

## வ. பொ. சளாப்பல்

20 அம்சக் கோரிக்கையை அம்மையார் ஏற்க மறுக்கும் நிலையில் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்படும்? கொம்யூனிஸ்ட் கட்சி ஆளும் கட்சிக்குத் தொடர்ந்து ஆதரவு அளிக்குமா அல்லது வெளியேறுமா என்று சிலர் கேள்விக்கணைகள் தொடுத்த போது பாசாங்கு வார்த்தைகளிலும் — மயக்கும் சொற்களிலும் கைதேர்ந்த திரு. வ. பொன்னம்பலம் நாம் விடுக்கும் இக்கோரிக்கைகள் இவ்வரசிற்கு மட்டுமல்ல தற்செயலாக ஐ. தே. கட்சி ஆட்சியைக் கைப்பற்றினலும் தாம் விடுத்துள்ள இக்கோரிக்கைகளை தொடர்ந்தும் அவர்களிடம் கேட்கப்படும் என்றும் கேட்ட கேள்விகளுக்கு நேரே விடை கூறாது பூசி மெழுகி விடையளித்தார்.

கூட்ட முடிவில் சிலரினால் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்ட நிலையில் ருசியாவிலும், சீனாவிலும் கொம்யூனிஸ்ட் ஆட்சியில் கடைப்பிடிக்கும் ஏதேச்சாதிகாரப் போக்கினை இங்கும் நிலைநாட்டும் முறையில் 20 அம்சக் கோரிக்கைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்று எதேச்சாதிகாரமாக அறிவித்து கூட்டத்தை முடித்தார்கள்.

கூட்டம் முடிந்ததும் பத்திரிகை நிருபர்கள் நடைபெற்றதுபற்றி வினவியபோது வீட்டை வாருங்கள், அறிக்கை தருகிறேன் என்றூராம் கோபாலபிள்ளை மகாதேவா!

உங்கள் உடம்புத் தூய்மைக்கு

நீம் வாசனை சோப் (வேப்பெண்ணை கலந்தது)
மெடிக்கேட்டற் சோப் பாவியுங்கள்-

மில்க் வைற் சவர்க்காரத்
தொழிலகம், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி 194 ஏ. இலக்கத்தில் 1976-ம் வருடம் ஜூன் மாதம் 30-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org